113344

செண்பகாரண்ய ஸ்தல
புராணச் சுருக்கம்

Q23:38.21193
N47
113344

431.



ஸ்ரீராமஜெயம்

இராஜமன்னார்குடியென வழங்கும்

# செண்பகாரண்யத் தலபுராணச் சுருக்கம்.

இஃது

சென்னை இந்துமத பரிபாலன சபையார் கட்டளைப்படி

ஸ்ரீராஜகோபாலஸ்வாமி தேவஸ்தானத்தாரால்

வெளியிடப்பட்டது.

---

தொகுத்தவர்



உ

ஸ்ரீ ராமஜெயம்

இராஜமன்னார்குடியென வழங்கும்

# செண்பகாரண்யத் தலபுராணச் சுருக்கம்.

இஃது

[illegible]னை இந்துமத பரிபாலன சபையார் கட்டளைப்படி

ஸ்ரீராஜகோபாலஸ்வாமி தேவஸ்தானத்தாரால்

வெளியிடப்பட்டது.

---

[illegible] வர்

O.813;38. 3.11935H. 11
N47

உ

கண்ணன் கழலிணை காப்பு.

## முன்னுரை.


ஸ்ரீவாசுதேவனும், ஸ்ரீராஜகோபாலனும் விளங்கும் திவ்ய தேசமாகிய செணபகாரண்ய தல வரலாற்றைச் சுருக்கி, தலயாத்திரை செய்வோர்க்கு வழிகாட்டியாக எளிய நடையில் எழுதும்படி பகவானருளால் கிடைத்த இவ்வரும் பணியை நோற்ற நோன்பிலேன்-நுண்ணறிவிலேனுமாகியவன் எழுதத் துணிந்தது பாற்கடல் நக்கு குக்கலையொக்கும்.

பகவத் பக்தர்கள் இரண்டு பதிப்புகளையும் ஆதரித்தது போல் இனிவரும் பதிப்புகளையும் ஆத[illegible]ரார்களென்று நம்புகிறோம். மேலும், ஈண்டு பரந்[illegible] உலப்பில் கீர்த்தி பேசப்படுமாதலால் பகவத் பக்த[illegible] அம்மெய்ப் பொருளையே விரும்பி, எழுதியவனது தன்மை, அறிவு முதலியவற்றை மறந்தும் ஆராயப்புகாது படித்து மகிழ்வர் எனும் துணிபு பற்றியேயாகும்.

இப்பணியிலீடுபடுத்திய எனது இன்னுயிரனை[illegible]ரும், எனக்குப் பல்லாற்றானும் [illegible] விளங்குபவரும் [illegible]

8 APR 1967

இராஜமன்னார்குடி



ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி

ஸ்ரீராமஜெயம்.

# செண்பகாரண்ய க்ஷேத்ரம் திருக்கோயிலமைப்பு.

---

கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே

1. ஜில்லா:—தஞ்சாவூர்.

தாலூகா—மன்னார்குடி (கஸ்பா) மன்னார்குடி ரயிலடியிலிருந்து 1¾ மைல். ஹரித்திராநதி ரயிலடியிலிருந்து 1¼ மைல். நீடாமங்கலத்திலிருந்து கற்சாலையில் தெற்கே 9 மைல்.

ஆறு:—பாம்பணியாறு

ஜனத்தொகை:— 21636 (1930)

சத்திரம்:—ஹரித்திராநதி ஈசான்ய மூலையில் சேதுபாவா சத்திரமும் தங்கப் பல சாவடிகளுமுண்டு. கோயில் பெரிய வீதிகளிலும் ராஜ வீதியிலும் பஜனை மடங்களதிகம். பங்குனி மாதப் பிரமோற்சவ காலங்களில் மட்டும் அநேக சத்திரங்களில் அன்னதானம் நடக்கும். மன்னார்குடி ரயிலடியிலிருந்து 2 பர்லாங் தூரத்தில் பாம்பணியாற்றுக்கு வடகரையில் ஓந்திரியர் சத்திரம் ஒன்று தங்க வசதியுடையது. ஷை சேதுபாவா சத்திரம் அந்தணர்க்கு அன்னமளிக்கும். கோயில் இருபுறத்திலும் வடக்குமுகமாக அகோபில மடமும் தெற்குமுகமாக வானமாமலை மடமுமமைந்துள்ளன.

2. கோயில் ஊருக்கு மேற்கே பெரியகோயில் என்னும் பெயருடையதாய் 154அடி உயரமுள்ள கம்பீர

மான ராஜகோபுரத்துடன் சுற்றிலும் பல மைல் தூரத்திலுள்ளவர்க்கும் காட்சி தரும். கோயில் 6 ஏக்கர் சதுரம். பிரகாரம் 7. கோபுரங்கள் 16. இதில் சண்பகப் பிரகாரம் பிரசித்தமானது. இங்கு சண்பக மரங்கள் அதிகம்

தலவிருட்சம்;—சண்பகம்.

## தீர்த்தங்கள் 10.

1. **கோப்பிரளயம்:—** இது கோயிலிலிருந்து தெற்கே ½ மைலிலுள்ளது. ஓமகுளம் என்றும் வழங்கும். இங்கு கோபிரளயர் கோபிலருடன் யாகம் எக்ஞும், ஹோமம்செய்து கலியுகத்தில் கண்ணன் சேவையைப் பெற்றார். இத்தீர்த்தத்தின் அக்னி மூலையில் சிறிய திருக்கோயிலில் ஸ்ரீ வாசுதேவ மூர்த்தி ஸ்ரீதேவி பூதேவியுடன் மேற்கு முகமாயும், வடக்கு நோக்கியிருக்கும் கோபில கோபிரளய ரிஷிகட்குச் சேவை சாதித்துக் கொண்டிருக்கிறார்.

இது முன்பு அக்னி பகவான் தவம் செய்த இடமாதலின் யக்ஞம் ஔபாசனாதிகள் செய்தால் விசேஷ பலனையளிக்கும்.

ஸ்நான விசேஷம்: நித்யமும் செய்ய லக்ஷ்மி கடாக்ஷமும் கார்த்திகை மாத ஞாயிற்றுக்கிழமைகளில் விசேஷ பலனுமுண்டு. ஒவ்வொரு ஞாயிறன்றும் ஷை மகரிஷிகள் தெரிசனம் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் சேவிக்கவேண்டியதவசியம்.

2. **ருக்மணி தீர்த்தம்:** கோயிலிலிருந்து தெற்கே கோபிரளயத்துக்குப் போகும் வழியில் ¼ மைலிலுள்ளது ஆடிமாதம் திங்கட்கிழமையிலும், பூர நட்சத்திரத்திலும் ஸ்நானம் உத்தமம்.



3. **கிருஷ்ண தீர்த்தம்.** கோயிலையடுத்து அக்னி மூலையில் அழகிய மைய மண்டபத்துடன் கூடியதீர்த்தம் பிரமோற்சவ முடிவில் விடாயாத்தித் தெப்பமாக கோபாலன் உற்சவம் கொண்டாடப்படும்.

தீர்த்தம் சீர்குறைந்து, படித்துறை முதலியனவும் இறங்கியேற வசதியின்றி நெடுங்காலமாயிருந்ததை மன்னார்குடி பாங்க் மானேஜர் ஸ்ரீ S. ராகவ அய்யங்கார் அவர்களின் பெருமுயற்சியால் மகா ஜனங்களின் பேருதவியைக்கொண்டு படித்துறை முதலியனவும் கருங்கல் திருப்பணியாய்க் கட்டியும், பெருமாள் எழுந்தருளும் மைய மண்டபத்தையும் சீர்செய்து வர்ணந்தீட்டி அற்புதமாய் விளங்கச் செய்திருப்பது பெரும் புண்ணியமும் போற்றத்தக்கதுமாகும்.

இதில் மார்கழி மாத ஸ்நான விசேஷம்.

குறிப்பு:–இதுபோலவே தருமசீலர்கள், பெயர் மாத்திரமாகப் பிரசித்தமாய், உருக்குலைந்துள்ள சங்கு சக்ர தீர்த்தங்களையும் கைங்கர்யம் செய்வது பெரும் புண்ணியமாகும்.

4. **சக்கர தீர்த்தம்:—** சக்ர தீர்த்தம் திருமஞ்சன வீதிக்கு மேல்புறம் ஹரித்ராநதிக்கு போகும் வழியில் ½ பர்லாங்கில் சக்கர வடிவமாயுள்ளது. ஆவணிமாதம் தீர்த்த விசேஷம்

5 **சங்குதீர்த்தம்:** இது ருக்மணி தீர்த்தத்தின் வாயு மூலையில் (சங்கு தீர்த்தத் தெருவில்) சங்கு வடிவமாயுள்ளது. சித்திரை மாத ஸ்நான விசேஷம்.

6. துர்வாச தீர்த்தம்: இது கஜேந்திர மோட்சம் (யானை விழுந்தான் குளம்) என்று வழங்கும். கோயில் மேலக்கோபுர வாயிலிலிருந்து மேற்கே 1 பர்லாங்கி லுள்ளது.


இதில் ஆனி மாதம் சனிக்கிழமை ஸ்நானம் விசேட மானது. ஆவணி ஞாயிறும் விசேடம்.

7. ஹரித்ரா நதி: இது பெரிய குளம் இதன் விஸ் தீர்ணம் 23 ஏக்கர். தெப்பக்குளம் என்று வழங்கும் இது கோயிலிலிருந்து வடக்கே நீடாமங்கலம் கற்சாலை யில் 3வது பர்லாங்கிலுள்ளது.

இதில் எக்காலத்திலும் ஸ்நான விசேஷமுண்டு. பௌர்ணமி, அமாவாசை, சூர்ய சந்திர கிரஹண காலங் களில் நீராடில் அசுவமேதயாக பலன் தரும். மாசி, பங்குனி மாத ஸ்நானங்கள் விசேடமானவை. ரோகணி, திருவோணநட்சத்திரங்களில் விசேடம். தருமசாத்திரங் களிலே பிராயச்சித்தங்கள் விதிக்கப்படாதவென்றி மறத்த லாகும் பாபமும் நீங்கும். இத்தீர்த்த மத்தியில் பிராகாரம் திருமதிலுடன் கூடியகோவிலில், மூலவர் வேணு கோபாலராய் ருக்மணி, சத்யபாமையுடனெழுந்தருளி யிருக்கிறார்.

இங்கு ஆனி மாதம் பௌர்ணமியில் தெப்ப உற்ச வம் விமரிசையாக நடைபெறும். 10 நாள் உற்சவ மாகும்.

8. திருப்பாற்கடல்: கோயிலிலிருந்து கிழக்கே பந்தலடிக்கு வந்து வடக்கே 1 பர்லாங்கிலுள்ளது.



கோவில் திருக்குளம் — ஹரித்ரா தீர்த்தம்.

மன்னார்குடி ரயிலடியிலிருந்து ¼ மைலில் பாம்பணியாற்றுப் பாலத்தையடுத்து ஆற்றின் தென்கரையிலுள்ளது. இத்தீர்த்தத்தில் பிருகு முனிவர் லட்சுமியைப் பெற்று நாராயணனுக்குத் திருமணம் செய்து அவளைக் கீழே விடாதபடி வைத்துக்கொள்ள விண்ணப்பித்த வண்ணம் லட்சுமிநாராயணர் என்ற பெயருடன் தென்கரையில் பெருமாள் திருக்கோயில் கொண்டுள்ளார்.

இத்தீர்த்தத்தில் தை மாதம் வெள்ளிக்கிழமை ஸ்நானம் விசேடமானது.

9. **கோபிநாத தீர்த்தம்** — (கோபினாங்குளம், ரெட்டைக்குளம் என்று வழங்கும்.)

கோயிலிலிருந்துநேரே பாம்பணி நதிவரை கிழக்கே 1¼ மைல் வந்து தெற்கில் ½ மைலிலுள்ளது. பாம்பணியாற்றின் மேல்கரையிலுள்ளது. தீர்த்தத்தின் மேல்கரையில் கண்ணன் தன்னைத் தனியாய்ச் சேவித்து இன்புற வேண்டிய ஒரு கோபிகையின் பொருட்டுச் சேவைசாதித்தார். கோயில் கோணப்பெருமாள் கோயில் என்று வழங்கும். மூலவர் வேணுகோபாலன். உற்சவர் ஸ்ரீராஜகோபாலன் ருக்மணி, சத்யபாமாவுடன் எழுந்தருளியிருக்கிறார். பங்குனி பிரமோற்சவத்தில் கருடசேவைக்கு முதனாள் பெருமாள் இங்கு காலையில் எழுந்தருளி இரவில் சேஷவாகனத்தில், பரமபதநாதனாய்ச் சேவை சாதித்து வருங்காட்சி அற்புதமானது. இதில் புரட்டாசி மாதப் புதன்கிழமை ஸ்நான விசேடம்.

10. **பாம்பணி நதி**:(பாமணியாறு என வழங்கும்) ஹரித்ராநதிக்கு வடக்கிலிருந்து கிழக்கே நோக்கி,

ஈசான்ய திசையில் தெற்கே திரும்பி சந்நிதிக்கு நேரே ஓடும். துலா ஸ்நானம் விசேஷம். வைகாசிப் பௌர்ணமியில் உதய கருடஸேவையுடன் பெருமாள் எழுந்தருளி தீர்த்தங்கொடுப்பார். பிரமோற்சவத்திற்கு, கொடி மண் எடுத்தலாகிய விசேஷமும். ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமிக்கு விசேஷமாய் நடை பெறுகிற ஆடி-சுக்லபட்ச ஏகாதசி ஜேஷ்டாபிஷேகத்திற்குத் தீர்த்தமும் இங்கிருந்து எடுக்கப்படும்.

---

## கோயில்

**மூலஸ்தானம்** வாசுதேவர்— சங்கு சக்ரம், கதையுடன் நான்கு கைகளையுடையவராய் கிழக்கே திருமுக மண்டலத்துடன் நின்ற திருக்கோலம், இரு பக்கங்களிலும் ஸ்ரீதேவி பூதேவியுடன் பிரமதேவரால் சிருஷ்டிக்கப்பட்ட சுயம்பு விமானத்தின் கீழ் விளங்குகிறார்.

**உற்சவமூர்த்தியாக** ஸ்ரீராஜகோபாலன் பசுவுக்கு முன்னால் நின்ற திருக்கோலமாய் ஒரு ஆடையும், ஒரு காதில் ஓலையும், மற்றொன்றில் குண்டலமுமாக கையில் கோலுடன் சிறிது சாய்ந்து நிற்கும் திருக்கோலம். இரு புறமும் ருக்மணி சத்யபாமை. கோபாலன் திருமுக மண்டலம் அழகொழுகு தேமல் புள்ளிகள் வாய்ந்ததாய் எந்த அலங்காரத்திலும் அழகுடனும் மந்தகாசத்துடனும் விளங்குவது பரமானந்தக் காட்சியாகும். திவ்ய தேச யாத்திரைகளில் எல்லா மூர்த்திகளையும் சேவித்த புண்ய சீலர்களும் இதற்கு ஒப்பான மூர்த்தி யெங்குமே இல்லையென்று கூறுகிறார்கள்.



**சந்தானராஜகோபாலன்:** ஆதிசேஷசயனராய்க் கட்டை விரலைச் சுவைத்துக்கிடக்கும் திருக்கோலம். தாயைக் குலவிளக்கம் செய்த தாமோதரனாகிய இந்த மாமதலைப் பிரானைப் பிரார்த்தித்துப் பூசித்துக் கையிலே எழுந்தருளச்செய்துகொள்பவர்கட்குப் புத்திரசந்தானம் கிடைக்கும் என்பது சத்யம்.

பெருமாளுக்கு முன்னே கருடாழ்வார் சந்நிதியும், அதற்கு வடக்கில் தெற்கு முகமாய் சேனை முதலியார், நாச்சியாருடன் மூலவர்-உற்சவர்.

**தாயார் சந்நிதி:** மூலஸ்தானம் - சம்பகலட்சுமி உற்சவர் செங்கமலத்தாயார், ஹேமாப்ஜநாயகி, ரக்தாப்ஜ நாயகி என்றும் வழங்கும் இதற்குத் தனிப்பிரகாரமும் உண்டு.

மேலப்பிரகாரத்தில் பாதுகா மண்டபம் ஒன்றுண்டு. இதில் பெருமாள் திருவடி சேவை கிடைக்கும். வாயு மூலையில் ஸ்ரீராமர், சீதை, லட்சுமணர் மூலவராக எழுந்தருளியுள்ளார்கள்.

வடக்குப் பிரகாரம் ஜெண்பகப் பிரகாரம். இதன் மத்தியில் சுவர்க்க வாயில் (சொர்க்கவாசல்) வைகுண்ட ஏகாதசிக்குப் பெருமாள் எழுந்தருள அடுத்த பிரகாரத்தில் மண்டபம் ஒன்றுண்டு.

சந்நிதிக்கு முன் ஆயிரக்கால் மண்டபம் அழகாக அமைந்துள்ளது. இதில் வடக்கு முகமாக ஏகாதசி உற்சவத்தில் பெருமாள் எழுந்தருளுவார். ஆயிரக்கால் மண்டபத்தின் மேல்புறம், தெற்கு முகமாக வேதாந்த தேசிகர் சந்நிதி.

ஆயிரக்கால் மண்டபத்தில் வடசாகில் தெற்கு முகமாய்

1. உடையவர் மூலவர் உற்சவர் (2)
2. கூரத்தாழ்வார் ,, (1)

துவஜஸ்தம்பத்தருகில் மேற்கு முகமாய்

1. குலசேகராழ்வார் மூலவர் உற்சவர் (2)
2. பெரியாழ்வார் ,, (1)
3. பொய்கையாழ்வார் ,, ,, (2)
4. பூதத்தாழ்வார் ,, ,, (2)
5. பேயாழ்வார் ,, ,, (2)

தெற்கு முகமான சந்நிதிகளாக

தொண்டரடிப்பொடியாழ்வார்-மூலவர்-உற்சவர் (2)


தாயார் சந்நிதி (வழியில்) வடக்கு முகமாக

1. நம்மாழ்வார் மூலவர் உற்சவர் (2)
2. மணவாளமாமுனி ,, ,, (2)

கிழக்கு முகமாக

திருமங்கை மன்னன் குமுதவல்லி சமேதராய்
—மூலவர்—உற்சவர் (2)

சிறப்புச்சிறப்பு:—எங்குமில்லாதபடி ஒரே கருங்கல்லாலாகிய ஐம்பத்திநான்கு அடி உயரத்தில் ஒரு கருடகம்பம் கம்பீரமாக நிற்கிறது. உச்சியில் கருடாழ்வார் மேற்கு முகமாய்ப் பெருமாளைச் சேவித்த வண்ணமமர்ந்துள்ளார். இது திருமங்கை மன்னனால் பஞ்ச மூட்டைகளையடுக்கி உயர்த்தி நிறுத்தப்பட்டதெனக் கூறுவது கர்ணபரம்பரையாகும். இதற்கு ஒப்பாக வேறு எங்கும் கருடகம்பமில்லை



ஸ்ரீராஜகோபாலஸ்வாமி கோவில் முன்புறத் தோற்றம்

பெருமாள் ஸந்நிதியின் முன் துவாரபாலகர்கள் உயர்ந்த கம்பீரமான அழகிய தோற்றத்தோடு தாமிரத்தினால் ஆக்கப்பெற்று அழகுடன் விளங்குகிறார்கள். மிகப் பழையபாவைவிளக்குகள் உண்டு. இவைகள் திருவிளக்கு நாச்சியார் என்னப்படும். பழங்காலத்து மன்னர் செய்த ஓவியச் சிறப்பைக் காட்டும் தன்மையுடையன.

## வாகனங்களில் விசேஷமானவை.

பஞ்சமுக அனுமார்: இது அபூர்வமாகக் காணப்படும். இதில் பிரமோற்சவத்தில் ராமாவதார ஸேவை.

கோவர்த்தனகிரி: மலையைக் குடைபிடித்தது.

கெண்டபேரண்டபட்சி: ஒரு உடலும் இருதலையோடும் கூடிய பட்சி.

குருந்த வாகனம்: சித்திரக்கூடமென வழங்கப்படுகிறது.

குதிரை வாகனம்; தங்க முலாம் பூசியது,

கருட வாகனம்; தங்கமுலாம் பூசியது. இவையிரண்டும் ராஜாங்க உத்தியோகத்திலிருந்த ஒரு துரை தன் வயிற்றுநோய் தீரப் பிரார்த்தித்தபடி நிவர்த்தியானதால் சமர்ப்பிக்கப்பெற்றதென்பது கர்ண பரம்பரை. கோபாலனுக்குப் பெரிய தேரும், செங்கமலத்தாயாருக்குப் பிரகாரத்திலேயே ஓடும் சிறிய தேரும் அழகமைந்தவைகளாக இரண்டு உண்டு.

ஆபரணங்கள் பழய ராஜாக்கள் காலத்தில் செய்து சாத்தப்பட்டன. சிறந்த பச்சை சிகப்பு முதலியன

உண்டு. மேலும் 1939—1941 வரையில் இருந்த ரூ. 1,24,000 பெறுமானமுள்ள பழம் நகைகளை உருக்கி கீழ்க்கண்ட சிறந்த நகைகளாகச் செய்யப்பட்டன:—

ஒரு தங்கக் கிரீடம்.

உபயநாச்சியாருக்கும் சங்கிலி மூன்று வடம்.

ஸ்ரீ வாசுதேவப் பெருமாளுக்குத் தங்கக் கிரீடம் 700 பவுனில் செய்யப்பட்டது.

காசுமாலைகள் 2.

100 பவுனில் பங்தேகோல் 1.

வெள்ளித் திருச்செவி 1.

இவைகள் ஏற்கனவேயிருந்த ஸ்ரீ பஞ்சாபகேசய்யரவர்கள் (எக்ஸிகியூட்டிவ் ஆபீஸர்) காலத்தில் செய்யப்பட்டன.

வேங்கடகிரி ராஜா: தற்போதுள்ள மகாராஜாவின் மூன்றுவது பாட்டனர் புத்ரனில்லாது, பல தருமங்களைச் செய்தும் பல தலயாத்திரை செய்தும் பலனில்லாமல் போகவே நமது கோபாலன் சொப்பனம் சாதித்தபடி இவ்விடம் வந்து சந்தானகோபாலனை எழுந்தருளச் செய்து ஏழு புத்ரர்களைப் பெற்றார். அவர் சந்ததி வாழையடி வாழையாய் விளங்கிவருகிறது. ஷை மகாராஜா சுவாமிக்கு வஜ்ரகண்டி ஒன்றும், சந்தானகோபாலனுக்குப் பதக்கம் ஒன்றும் சமர்ப்பித்திருக்கிறார்.

---

## உற்சவாதிகள்

இந்தத் தலத்தில் 12 மாதமும் உற்சவங்களும் கடைசியாகப் பங்குனியீ ப்ரமோற்சவமும் நடைபெறும்.



1. சித்திரை: சைத்ரோத்சவம் 10 நாள். அட்சய திருதியை தங்கக் கருடசேவை.

2. வைகாசி: வசந்தம் 10 நாள். விசாகக் கருடசேவை.

3. ஆனி: தெப்போற்சவம் ஹரித்ராநதியில். 10 நாள் உற்சவமாகும். 10ம்நாள் பௌர்ணமியில் தெப்பம்.

4. ஆடி: பூரம். தாயார் உற்சவம். செங்கமலவல்லித் தாயாருக்குத் தனி உற்சவம். 4ம் நாள் கருடசேவை. 10ம் நாள் பூரத்தன்று பெரிய பிரகாரத்தில் தேர்.

5 ஆவணி: பவித்ரோத்சவம் 10 நாள். இது சம்வஸ்தர பிராயச்சித்தஉற்சவம். கடைசிநாள் ஹரித்ரா நதி தீர்த்தம்.

6. புரட்டாசி: நவராத்திரி உற்சவம். விஜயதசமியன்று கோபிநாத தீர்த்தக் கரையில் அம்பு போடப் பெருமாள் எழுந்தருளுவர்.

7. ஐப்பசி: தீபாவளி உற்சவம். ஆழ்வார்களுக்கு மங்களாசாசனம்.

அன்று பெருமாளுக்குமுன் பட்டோலை படித்து ஒப்புவிக்கப்படும்.

8 கார்த்திகை: திருக்கார்த்திகை உற்சவம். சொர்க்கபானம் கற்பூரத்திலேயே நடைபெறுகிறது.

9. மார்கழி: அத்யயன உற்சவம் அல்லது இராப்பத்து, பகல் பத்து. வைகுண்ட ஏகாதசி பிரதானம். அன்று மூலஸ்தானம் பரவாசுதேவப்பெருமாளை பாதாதிகேசம் சேவிக்கலாம். அன்று புஷ்பங்கி கைங்கர்யம் விசேஷமாய் நடைபெறுகிறது.

10. தை: பிரணய கலக உற்சவம் (ஊடல்) மட்டையடி என வழங்கும். புராணம் படித்துத் தாயாரை சமாதானப்படுத்துதல். மறுநாள் ஏகசிம்மாசனம் சேவிக்கத் தக்கது. கோபாலன் உபயநாச்சியார்-செங்கமலத் தாயாருடன் சேவை. இந்த ஏகசிம்மாசன சேவை மட்டும் வருஷத்திற்கொருமுறை நடப்பது.

இது ஸ்தானீகம் சம்பகமன்னார் தீட்சதரவர்களால் ஏகசிம்மாசனம் தனியாகச் செய்யப்பட்டு அழகான வேலைப்பாடமைந்த ஊஞ்சலில் எழுந்தருளப்பண்ணி காலை முதல் மாலை வரை சேவை செய்யலாம்.

தாயார் அத்யயன உற்சவமும் 10 நாளும் ஏகசிம்மாசனமும் சிறப்பானவை.

11. மாசி. டோலோற்சவம் 10 நாள். (ஊஞ்சல் திருநாள்)

12. பங்குனி: கொடியேற்றமும்ரோகணியில் தேரும். த்வஜாரோகணம் கொடிச்சப்பரம்.

| | கல்யாணத் திருக்கோலம் | |
|---|---|---|
| புன்னை வாகனம் | கண்ணன் | ,, |
| ஹம்ச வாகனம் | ராஜா | ,, |
| கோவர்த்தனகிரி | கண்ணன் | ,, |
| பஞ்சமுக அனுமார் | மரவுரி | ,, |
| கெண்டபேரண்டபட்சி | ராஜா | ,, |
| பல்லக்கு சேவை | ராஜா | ,, |
| சித்திரக்கூடம் (ரிஷ்யமுக பர்வதம்) | பட்டாபிராம | ,, |
| சிம்ம வாகனம் | ராஜா | ,, |
| சூர்யப்பிரபை | வேணுகோபால | ,, |
| சேஷ வாகனம் | பரமபத | ,, |



| | |
|---|---|
| கெருடசேவை | வயிரமுடி ஸேவை |
| அனுமந்த வாகனம் | ராமர் திருக்கோலம் |
| யானை வாகனம் | ராஜாலங்காரம் |
| | திருக்கல்யாணோற்சவம் |
| சூர்ணோத்சவம்-கோரதம் | |
| இரவு புஷ்பப்பல்லக்கு | கல்யாணத் திருக்கோலம் |
| நவநீதசேவை (வெண்ணெய்த்தாழி) | கையில் குடத்துடன் வெண்ணெயுண்ணும் திருக்கோலம் |
| மாலையில் குதிரை வாகனமும் | திருத்தேருக்கெழுந்தருளும் |
| திருத்தேர் | ஸப்தாவர்ணம் |

கருடசேவை மிக விசேஷமானது. இது பெரும்பாலும் அமாவாசைத் திதியில நேருமேயல்லாமல், திதிப் பிரதானமாய் அமாவாசையிலேயே நடைபெறுவதில்லை என்பதை அறியவேண்டும்.

**நவநீதசேவை:** கண்ணன் பாலனாய் எல்லா ஆபரணங்களையுமுடையவனாய் குடத்துடன் பல்லக்கில் எழுந்தருளும் காட்சி அற்புதம். இன்று தவழும் திருக்கோலமான அலங்காரத்தில் முன்னழகும் பின்னழகும் காணக் காணத் தெவிட்டாத இன்பம் தரும். "தோள் கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமலமன்ன தாள்கண்டார் தாளே கண்டார்" என்பதற்கிலக்காய் கண்டார் மனம் கவரும் கண்ணனை யிவ்வுற்சவத்தில் சேவித்தல் அவசியம். இன்று வரும் பஜனை கோஷ்டிகளும் அளவிலாதனவாகும்.

திருத்தேரானது சோழநாட்டுத்தேர்களில் மூன்றாவது என்று சொல்லப்படும். இதையிழுக்க 5000 ஆட்கள் வரை செல்லும். தற்போது தர்மகர்த்தாய் விளங்கும் **ஸ்ரீ. T. S. சாமிநாத உடையாரவர்கள்** பிரபல பிராசுதார்களது பூரணமான உதவியைக்கொண்டு கடந்த இரண்டு வருடங்களாக இரண்டொரு நாளில் பக்தி சிரத்தையுடன் தேரினை நிலைக்குக் கொண்டுவருவது போற்றத்தக்கதாகும்.

ஸ்ரீ

வாசுதேவாய நம:

பூமகள் திருமுகமாகிய சோழநாட்டிலே கங்கையிற் புனிதமாய காவிரிக்குத் தென்திசையில் சண்பகாரண்யம் என்றொரு திவ்ய தேசமுண்டு. இது அளவிலாப்பெருமையுடையது. இதன் பெருமை மகாபாரதம், ஸ்ரீ ஹரிவம்சம் சேஷதர்மத்திலும், பிர்ம்மாண்ட புராணத்திலும் ஸ்காந்த நாகர காண்டத்திலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கபுராணத்திலும் திருப்பதி புராணத்திலும் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

ராஜமன்னார்குடியென வழங்கும் இந்தலத்திற்கு (1) ஜெண்பகாரண்யம் (2) வண்டுவராபதி, (3) தெட்சணத்துவாரகை (4) வாசுதேவபுரி, (5) சுயம்புஸ்தலம் என்ற பலபெயர்களுண்டு. **செண்பகாரண்யம்** என்றால் செண்பகவனம் அதாவது செண்பக மரங்களடர்ந்த காடு என்று பொருள். வண்டுவராபதி எந்தப் பூவையும் விடாது முகர்ந்து தேனைக் குடிக்கும் வண்டும், முகர முடியாத அவ்வளவு வாசனையோடு கூடிய சண்பகப்பூ மரங்களடர்ந்த தலம். ஆகவே இப்பூவிலுள்ள தேனும் வண்டால் உண்ணப்படாததாகும். மற்றப் பூக்களைப் போல் வண்டின் எச்சில் படாது பெருமாளது திருவடி, திருத்தோள், திருமார்பு, திருமுடியிலணியப்பெறும், தனிச்சிறப்புடைய புஷ்ப ராஜாவாயிற்று. இவ்வளவு பெருமையுடைய புஷ்பங்களையுடைய பு ந்த தலமென்பது பொருளாயிற்று. வண் துவராபதி—துவாரகை யெனும் பெ ருள் திருவாய்மொழியில் வழங்கும். தெட்சணத்வாரகை நாட்டில் இருக்கும் துவாரகையைப்போல், தெ கே கண்ணனது லீலைகள்

113344

செய்யப்பெற்று, அந்த ராஜாதிராஜனான ஸ்ரீ ராஜகோபாலனால் துவாரகையொப்ப ஆட்சி புரியப்பட்டுவரும் தலம். வாசுதேவபுரி பரவாசுதேவர் மூலவராய் எழுந்தருளியுள்ள தலம். பிரமா, துவாதசாட்சர மந்திரத்தைச் சித்திசெய்து வாசுதேவனருள்பெற்ற தலம். சுயம்பு ஸ்தலம். ஒருவராலும் உண்டுபண்ணப்படாமல் தானாகவேயமைந்த தலம். பிரமாவால் சிருஷ்டித்த சுயம்பு விமானத்தையுடையது.

இந்தத்தலமானது ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்றவைகளில் முதன்மை வாய்ந்த திருவரங்கத்திற்கு ஐந்து யோசனை தூரத்திலும் திருக்குடந்தைக்கு (கும்பகோணம்) இரண்டரை யோசனையளவிலும் உளது.

இது ஆதிமுதற்கொண்டு வாசுதேவபுரி என்று வழங்கப்படுவது. தாரக நாமம் "ராமா" என்னும் இரண்டெழுத்துக்களையும். (அஷ்டாக்ஷரம்) "ஓம் நமோ நாராயணாய" எனும் திரு எட்டெழுத்துக்களையும் உடையனபோல மஹாமந்திரமாகிய துவாதசாக்ஷரம் "ஓம் நமோ பகவதே வாசுதேவாய" என்னும் பன்னிரண்டெழுத்துக்களைக் கொண்டதாகும். இம்மஹாமந்திரம் யாவர்க்கும் சுலபமாக உபதேசிக்கப்படுவதல்ல அளவிலாத கைங்கர்யங்களை அனந்த பிறவிகளிலே செய்தார்க்குத் தேசிகரால் முடிவிலே உபதேசிக்கப்படுவது. இது பரவாசுதேவனாகிய பரமாத்மாவை ஜீவாத்மாவுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காட்டுவித்து, அவன் திருவடியைக் கூட்டுவிக்கும் பெருமையுடையது. பாலனான துருவனுக்கு, பரமசுலபமாகப் பரமாத்ம தெரிசனங்



கிடைக்கும் பொருட்டு நாரதரால் உபதேசிக்கப்பட்ட பரமமந்திரமிதுவே. பாகவதமறிந்த பெரியோரும் அல்லாத மற்றெவரும் துருவ நட்சத்ரத்தைக் காண்கிறோம். துருவ நட்சத்ரத்தின் உயர்நிலையையும் பெருமையையும் கூற முடியுமோ? முடியாது. அந்த மந்திர மூர்த்தியான ஸ்ரீ வாசுதேவப் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் விளங்குகிற தலம் இந்த ஒன்றைத்தவிர வேறு இல்லை.

---

## பிரமதேவர் அருள்பெற்றது.

முன்னொருகால் பிரமதேவருக்குத் தன்னிலும் சிறந்தவரில்லையெனும் அகங்காரம் மேலிட்டது. தானே உலகத்தைப் படைப்பவனானதால் தானே பெரியவன் என்று எண்ணியிருந்த பாபத்தால் பரமாத்மாவின் சங்கற்பத்தால் (சிருஷ்டி) படைப்புத்தொழில் மறந்தது. உடனே செய்வதொன்று மறியாதவராகி வேதவித்துக்களும் ஞானிகளுமாகிய சனகாதி முனிவர்களையடைந்து தன் குறையைக் கூறினார். பரமாத்மனை மறந்து தன்னைப் பரமாக நினைந்த பாபம் போக்க முடியாதது. இத்தகைய பாபம் செண்பகாரண்யத்தையடைந்து அங்குள்ள அதிவிசேடமான தீர்த்தங்களிலாடி, பரவாசுதேவரைப் பன்னிரண்டெழுத்தால் வணங்கி யருள்பெற்றாலல்லது வேறு வழியில்லையென நால்வரும் ஒருமுகமாகக் கூறி யருளினார்கள். உடனே அந்த உபதேசத்தைச் சிரமேற்கொண்டு சண்பகாரண்யத்தை யடைந்து தீர்த்தங்களிலாடி பரவாசுதேவனைக் குறித்துத் துவாதசாக்ஷர மந்திரத்தை ஜபித்

துக்கொண்டிருந்தார். மூர்த்தி, தலம், தீர்த்தமாகிய மூன்றின் விசேஷங்களினாலேயும் ஒரு மனதுடையவராய் பிரமா, மகாமந்திரத்தை ஜெபித்ததனாலே யாவர்க்கும் எளிதில் கிடைக்காத அருள் கிடைத்தது. பரவாசுதேவர் காட்சிதந்து அவர் படைப்புத்தொழிலை யருள் செய்து வேண்டிய வரங்களைக் கேட்கவும் திருவுளம் பற்றினார். உடனே பிரமா தான் அடைந்த படைப்புத் தொழிலால் சுயம்பு விமானம் ஒன்றுண்டாக்கி வாசுதேவ மூர்த்தியை எழுந்தருளச்செய்து தனக்கும், வரும் பக்த கோடிகளுக்கும் இங்கேயே நிலையாயிருந்து யாவர்க்கும் சேவை தந்தருளும்படி விண்ணப்பித்தபடியே பெருமாளும் அருளினார். பிரமதேவர் வெகு சிறப்பாக பிரமோற்சவமும் செய்து மகிழ்ந்தார்.

---

## திருமால் லக்ஷ்மிநாராயணனாய் விளங்குதல்

முன்னொரு காலத்தில் பிருகு முனிவரின் பத்தினி அசுரர்க்குதவி செய்யவே பெருமாளது சக்ராயுதமானது அவளைக் கொன்றது. பிருகுமுனி கோபத்தையடைந்தவராய் தன் மனைவி செய்த குற்றத்தையும், அவளைத் தண்டித்தது பெருமாளின் ஆழி யென்பதையும் அறியாமல் "என் மனைவியை எவன் இப்படிப் பிரித்தானோ அவன் தன் மனைவியைப் பிரிந்து வருந்தக் கடவன்" என்று சபித்தார். கோபம் நீங்கி சாந்தமடைந்த பிறகு தன் மனைவியின் குற்றத்தையும். தான் அறியாது பெருமாளைச் சபித்த பாபத்தையும் போக்கவல்ல உபாயத்தை பல பெரியோர்களையடுத்துக் கேட்டார். ஒவ்வொருவரும்



தாம் கற்றறிந்த தருமசாஸ்திரங்களில் கண்ட ஒவ்வொன்றைக்கூற, மனம் தேற்றமடையாது வேறு பெரியோர்களையடுக்க ஒவ்வொருவரும் ஒவ்வொரு தலத்தையும், மூர்த்தியையும் பெரிதென்று கூற, அதனாலும் தெளியாதவராய் வேதமூர்த்தியாகிய பிரமதேவரையடைந்து விண்ணப்பித்தார். பிரமதேவர் தான் பரம அந்தரங்கமாகப் பூஜை செய்து வரும், வாசுதேவபுரியையும் தீர்த்தங்களையும், வாசுதேவமூர்த்தியையும் சிறந்ததாகக் கூறி துவாதசாட்சர மந்திரத்தால் உபாசிக்கக் கூறினார். நவ தீர்த்தங்களிலும் சிறந்த திருப்பாற்கடற்கரையில் தவஞ் செய்யும்படி கூறியபடியே பிருகு முனிவர் வாசுதேவபுரி யடைந்து திருப்பாற்கடலிலே நீராடி லட்சுமியைக் குறித்துத் தவஞ்செய்தார். தல விசேடத்தாலும், தீர்த்த விசேடத்தாலும் சீக்கிரத்தில் லட்சுமி காட்சி தந்து என்ன வரம் வேண்டுமென்று கேட்க உன்னையறியாதபடி பெருமாளைவிட்டுப் பிரியும்படி சபித்த பாபம் நீங்க எனக்குப் புத்ரியாகி நீ வந்து உன்னை பெருமாளை விட்டு நீங்காதபடி திருக்கல்யாணஞ் செய்து கண்டு மகிழவேண்டுமென்று விண்ணப்பித்தார். பிராட்டியும் திருவுளம்பற்றி பார்க்கவி என்னும் பெயரோடு அவருக்குப் பெண்ணாகி இங்கே வசித்தனர். முனிவரும் தவஞ்செய்தார், திருவும், நாராயணனை மணஞ்செய்யத் தவஞ்செய்தனள். நாராயணனும் இவர் தவத்திற்கிரங்கி காட்சியளித்து வேத விதிப்படி சர்வ தேவ, முனி பாகவதர்களும் கண்டு களிக்கத் திருமணஞ் செய்தார். பார்க்கவியாகிய தாயின் விண்ணப்பத்தின்படி பிருகு முனிவரும் மன்னிக்கப்பட்டு பெருமாளருளப்பெற்றானந்தத்திலமிழ்ந்தார். பெருமாளும் முனிவரின் பிரார்த்

தணையின்படி பிரியாப் பிரியமுடைய பிராட்டியைத் தினைப்பொழுதும் பிரியாதபடியும், கீழே விடாதபடியும் இடப்பக்கலிலே யமர்ந்த திருக்கோலமாய் "லட்சுமி நாராயணர்" எனும் திருநாமத்தோடு அன்று முதல் என்றும் காட்சி தந்து வருகிறார்.

---

## அக்னி பகவான் அருள் பெற்றமை

பெருமாளைத் தாங்கும் பெரும் புண்யமுடைய (பெரிய திருவடி) கருடன் தன் தாயான வினதை வெகு காலமாய்த் தன் சிறிய தாயாகிய கத்ருவிற்கு அடிமை செய்யுங் குறையை நீக்க அமுதங்கொண்டுவரத் தேவ லோகஞ் சென்று அமுத கலசத்தை எடுக்கப் போகும் போது அக்னி தடை செய்தார். உடனே கருடன் சபிக்கவே அக்னிபகவான் காந்தியையும், உஷ்ணத்தையு மிழந்து தவிக்கலானார்.

ஒன்றும் செய்யவறியாதவராய் பிரமதேவரிடம் சென்று முறையிட பிரமா வாசுதேவபுரியில் கோபிரளயத் துக் கருகில் தவஞ் செய்தால் உன் சக்தியைப் பெறலா மென்றருள்செய்தபடி அக்னி தேவரும் செய்து வாசு தேவ மூர்த்தியால் அதிகமான தேஜஸையும் உஷ்ணத் தையுமடைந்தார்.

## முசுகுந்த சக்ரவர்த்தி முக்தியடைந்தமை.

முசுகுந்தர் மோட்சத்தின் பொருட்டு ருத்ரனைப் பிரார்த்திக்க ருத்ரர் அவருக்குத் துவாதசாட்சரத்தை யுபதேசித்துசண்பகாரண்யத்தில் தவஞ்செய்யக்கட்டளை யிட்டபடி சக்ரவர்த்தி தவஞ்செய்தார். பெருமாளும் காட்சி தந்து மோட்சமுந் தந்தார்.



## கண்ணன் கோபில கோபிரளயர்களுக்குச் சேவை சாதித்தது.

துவாபரயுகக் கடைசியில் கோபிலர் கோபிரளயர் என்ற இரு முனிவர்கள் கண்ணனை, மோட்சத்தின் பொருட்டு உபாசித்தனர். அசரீரி அவர்களது எண்ணம் நிறைவேறும்படி துவாரகைக்குச் சென்று கண்ணனைக் கண்ணாரக்கண்டு சேவித்தால் சித்திக்கும் முக்தியென்று கூறியது. அதன்படி முனிவர்கள் வடக்கு நோக்கித் துவார்கைக்குப் புறப்பட்டனர். தினமும் நடந்து இரவில் தங்கி மறுநாள் நித்ய கருமங்களை முறையே செய்து புறப்படுவது வழக்கம். ஒரு நாள் தியானத்திலே மனம் லயித்து நின்றது. அப்படியே சிறிது காலம் சென்றமையால் துவாபரயுகம் கழிந்து கலியாரம்பமாகி யது. "போகிக்கு கணம் யுகமாயும், போகிக்கு யுகம் கணமாயுங்" கழியுமென்றபடி கலியுகம் பிறந்தமையை யறியாது வழக்கம்போல் வடக்குநோக்கி நடந்தனர். யமுனா நதி தீரத்தையடைந்தபோது, கண்ணனருளால் வழியில் நாரதர் எழுந்தருளக்கண்டு அவரை வணங்கித் தம் வரலாற்றை கூறினார்கள். நாரதர், கண்ணபிரான் தனது அவதார லட்சியங்களைப் பூர்த்தி செய்துவிட்டுத துவாபர யுகத்திலேயே பரமபதத்துக்கு எழுந்தருளி விட்டதாகக் கூறியது கேட்டு இடியுண்ட நாகம் போலத் தம்பமாய் நின்றனர். நாரதர் மெதுவாய் அவர்களைத் தேற்றினார். முனிவர்கள் நாரதனையே தமக்கு ஒரு உபாயம் கூறித் தங்கள் எண்ணம் நிறைவேறும்படி செய் தருள் வேண்டினர், நாரதரும் அவர்கட்கு, துவாதசாட் சர மந்திரத்தையுபதேசித்துச்செண்பகாரண்யம் சேர்ந்து

ஹரித்ராநதி தீரத்தில் தவஞ்செய்யச் சொல்லியருளிய படி அவர்கள் தவம் செய்தனர். கோபிரளயக் கரையில் ஹோமம் செய்தார்கள்.

கண்ணன் அவர்களது தவத்துக் கிரங்கி காட்சி தந்தருளி வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்ளும்படி திருவாய்மலர்ந்தருளியபடி முனிவர்கள், உமது கண்ணனவதாரத்தில் செய்தருளிய விசேஷமான லீலைகளை எங்கட்குத் தந்தருளி முக்தியும் கொடுக்கவேணுமென்ற படி பெருமானும் திருவுளம்பற்றியருளினார்.

## சிறந்த முப்பத்திரண்டு திருக்கோலங்கள்.

1. கிரீட, மகுட, குண்டலங்களோடு எல்லாத் திருவாபரணங்களையுடையவனாய் நான்கு கைகளையுமுடைய பாலகிருஷ்ணனானது.

2. பூதனை முலைப்பாலுண்டது.

3. யசோதை தாய்ப்பாலை யவள்முகம் பார்த்து உண்டது.

4. யசோதைக்குத்தான் உலகமுண்ட பெருவாயன் என்னும் ரகசியத்தைக் காட்டத் தன் சிறிய பவள வாயைக் காட்டியது.

5. சிறந்த அலங்காரங்களுடன் பாலனாய் முழங்கால் கைகளாலும் தவழுவது.

6. ஒரு கையில் வெண்ணெயோடு மற்றொரு கையால் அபிநயங்காட்டிக் கூத்தாடியது.



7. கோபாலன் என்ற திருநாமத்திற்கேற்ப, ஒரு ஆடையுடனும், கையில் கோலுடனும் பசுக்களை மேய்த்து வருமற்புதக் கோலம்.

8. உறக்கத்திலிருந்து தயிர் கடையும் ஓசையால் விழித்து வெண்ணெய் திருட, ஓசையின்றி நடந்து வெண்ணெய் திருடியது.

9. ஆடையின்றி நீராடிய குற்றத்திற்காக, கோபிகைகளின் ஆடையைக் கவர்ந்தது.

10. வேணுகோபாலனாய், கோக்களும், சர்வாத்மாக்களும் பரமானந்தமடையும்படி புல்லாங்குழலூதியமை.

11. ஒரு கோபி கண்ணன் திருட்டைக்கையுங்களவுமாகக் கண்டுபிடிக்கவெண்ணி வெண்ணெயையும் தயிரையும் மூடி ஒளிந்திருக்கும்போது ஒருவருமறியாமல் அவைகளைக் கவர்ந்துண்ட பிறகு கோபி கண்ணனை வீட்டிலே சென்று பார்க்க உரலோடு கட்டுண்டு கிடத்தல்.

12. பிருந்தாவனத்தில் இடவணரை யிடத்தோளொடுசாய்த்து இருகைகூடப் புருவம் நெரிந்தேறக் குடவயிறுபட வாய்கடைகூடச் சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச் செங்கண்கோட கருங்கண் தோகைமயிற் பீலியணிந்து கல்லுங்கரையக் குழலூதிய அற்புதக் காட்சி

13. இடையர் நிற்கும் நிலையாக இடதுகால் நேராகவும் வலப்பாதம் இடது புறங்காலில் தொடவும் தண்டத்தை யிருகையாலூன்றித் தலையை வைத்து, பசுக்கூட்டத்திற்கு நடுவே கோபிகைகளும் சூழ்ந்த காட்சி.

14. பசுக் கறக்கும்போது இடது கையில் பாத்திரமும், வலக்கையில் அணைகயிறுமாக கற்பக மரத்தடியில் நின்றமை.

15. கன்று ரூபமாக வந்த அரக்கனை விளாம்பழவடிவங்கொண்ட மற்றொரு அரக்கன்மேல் எறிந்து இருவரையுங் கொன்றமை

16. காளிங்கமர்த்தனம்: இடது காலைப் பாம்புப் படத்தின் மேலும் இடைக்கையால் வாலைப் பிடித்தும் நர்த்தனம் செய்தமை

17. கோபிகைகளுடனும் ராதையுடனும் கலந்திருந்த சின்னங்களுடனும் மூன்று வளைவுள்ள வேத்திரத்துடன் வரும்போது ஊடல் (பிரணய கலகம்) பிராட்டியைச் சமாதானப் படுத்தியமை.

18. சங்கு, சக்கரம், பாசம், பாணம், கருப்புவில் அங்குச மிவைகளையுடையவராய் நான்கு கைகளுடன் அறுகோண சக்கரத்துள் நின்ற திருக்கோலம்

19. பதினாயிரம் கோபிகா ஸ்திரீகளுடன் அனந்த ரூபியாய் ராஸக்ரீடை.

20. ததிபாண்டருக்கு அவதாரங்களைக்காட்டியருளியமை.

21. தயிரன்னத்தை இடக்கையிலும், ஊறுகாய்களை விரலிடுக்கி, கோபிகைகளின் மத்தியில் உமுனாதி மணற்குன்றில் வீற்றிருந்து ஒருவர்க்கொருவர் அமுது செய்தமை;

22. கோகுலத்தை யழிக்கவெண்ணி எழு மேகங்களையும் பெய்யச்செய்தபோது எழு நாள் கோவர்த்தன மலையைக் குடையாய்ப் பிடித்துக் கோக்களையும், கோகுலத்தையும் காத்தருளியமை.



23. கோபவத்ஸர்களையும், பசுக்களையும், கன்றுகளையும் பிரமா அபகரிக்கக் கண்ணன் அத்தனை வடிவங்களையும் எடுத்துக் காட்சி தந்தமை.

24 கோபியின் தோட்டத்தின் பூஞ்சோலையில் சரசமாடுதல்.

25. பாரிஜாத புஷ்பச் செடியைச் சத்யபாமையின் வீட்டுத் தோட்டத்தில் வைத்துப் புஷ்பங்களை ருக்மணி வீட்டில் விழும்படி செய்து சத்யபாமையின் கோபத்தை தணித்தல்.

26. சத்யபாமையின் கர்வ பங்கம்; சத்யபாமை புண்ய விரதத்தின்படி கண்ணனை நாரதருக்குத் தானம் செய்தும், கண்ணனை விட்டுப்பிரிய முடியாதவளாய்ப் பின்தொடர நாரதர் கண்ணன் எடைக்குத் தங்கம் கொடுத்தால் கண்ணனை விட்டுவிடுவதாகக் கூறினார். அதன்படி கண்ணனை ஒரு தட்டில் வைத்து மற்றொரு தட்டில் மலையளவு தங்கத்தை யேற்றியும் தராசு சமப்படாதது கண்டு, ருக்மணியையண்டிக் கண்ணனை மீட்டுத் தரும்படி வேண்டினாள். ருக்மணி தங்கத்தைக் கீழே தள்ளி, பெருமாளின் பாதத் துளசிதளம் ஒன்றைத் தராசுத் தட்டிலே வைத்தவுடனே கண்ணன் மேலே செல்லவும் துளசித் தட்டு அதிக நிறையுடையதாய்த் தரையிற்றாழ்ந்தது. நாரதர் திருத்துழாயை யெடுத்துக் கொண்டு கண்ணனைத் திரும்பக் கொடுத்தார்.

27 மதுரையில் மல்லரங்கத்திலே குவலயாபீடமென்னும் யானையைக் கொன்று அரங்கத்திலிருந்து மல்லர் முதலாயினோருக்கு யமனைப் போலவும், பெண்களுக்கு மன்மதனைப் போலவும், ஜனங்கட்கு அரசனைப் போலவும் காட்சியளித்தமை. ஸ்ரீவா

28. துவாரகையில் நவரத்னமணி மண்டபத்தில் சயனத்தில் ருக்மணி சத்யபாமையுபசரிக்க வீணை வேணு மிருதங்க கானங்களை யனுபவித்தபடியே பள்ளிகொள்ளும் நிலை.

29. பாண்டவ தூதனாய் ரதத்திலேறி அஸ்தினாபுரம் சென்றமை.

30. பார்த்தசாரதியாய் கீதோபதேசம் செய்யும் திருக்கோலம்.

31. கண்ணன் வலக்கையில் மூன்றுவளைவுள்ள பொற்கோலுடன் இடக்கை சத்யபாமை தோளின் மேலும் வைத்த வண்ணமாய் ருக்மணி கண்டு மகிழும் காட்சி

32. கடைசியாக கோபில கோபிராளயர் யமுனையில் கோபிகைகளுடன் ஜலக்ரீடை செய்த பிரகாரம் ஹரித்ரா நதியில் காட்சி தந்தருள வேண்டியபடி எம்பெருமான் கட்டளையால் தேவதச்சன் வடமதுரைக்குச் சமமாக இந்த வாசுதேவபுரியை நிர்மாணித்து ஹரித்ராநதியை தெளிந்த ஜலத்துடன் நிரப்பியவுடன் பரந்தாமன் பதினாறாயிரம் கோபிகைகளுடன் இடைய வேடந்தரித்து ஜலக்ரீடை செய்தருளினார். கடைசியில் அவசரமாக எல்லாரும் கரையேறியபோது தத்தமக்குக் கிடைக்கும் ஆடையாபரணங்களை யணிந்துகொள்ளவே கோபாலனுக்கு ஒரு தண்டலமும் ஒரு ஓலையும் ஒரு ஆடையுமே கிடைத்தது
ஸ்ரீவித்யாராஜகோபாலன் எனும் நாமமுண்டாகியது.
களை வைகளை யணிந்து வலக்கையில் வேத்திரத்தைக்கொண் மலை இடது கையை சத்தியபாமையின் தோளின்மேல் வைத்தும் வலது பக்கத்தில் ருக்மணியுடனும் காட்சி
தருளினார்.



இந்த க்ஷேத்திரத்தில் பாம்பணி நதியின் வடபால் ஜெயங்கொண்டநாதர் எனும் நாமத்தோடு திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமானால் பகவானது சிரமபரிகாரத்துக்கு நந்தகோபர் மூலம் அனுப்பப்பட்ட திரட்டுப்பாலை கோபாலன் யாவருடனுமிருந்து வனபோஜனமருந்தியது. இந்த 32 அற்புதக் காட்சியுந் தந்து கோபில கோபிராளயர்களுக்கு பரமபதமுந் தந்தருளினார்.

கலியுகத்திலே ராஜசேகரனெனும் ராஜா எக்ஞசிலரெனும் முனிவர் தனக்குச்செய்த நன்றியை மறந்த பாபத்தால் நாடு நகரங்களை யிழந்து பிரமையடைந்து பிச்சையெடுத்துழன்றார்.

தெய்வாதீனமாக அந்த எக்ஞசீலரென்னு முனிவர் கருணையினாலே அவனது நிலைக்குப் பெரிதும் வருந்தி உடனே அவ்வரசனுக்கு மந்திரங்களுள் சிறந்த துவாதசாட்சரத்தை யுபதேசித்து திவ்ய தேசங்களில் சிறந்ததான சண்பகாரண்யஞ்சேர்ந்து, போகாத பாபத்தையும் போக்கவல்ல ஹரித்ராநதியில் தீர்த்தமாடிப் பெருமாளைச் சேவித்து மந்திர சித்தி செய்யும்படி கட்டளையிட்டார். அரசன் அவ்வண்ணமே செய்து, பரிசுத்தனாகி இழந்த நாடு நகரங்களையும் திரும்பப் பெற்று மங்களமாக நீடு வாழ்ந்து கைங்கர்யம் பல செய்து பரமபதமடைந்தான்.

அவன் புத்ரனாகிய சுவர்ணசிகாமணி பின் அ சாண்டான். ஆனால் புத்ரனடையும் பாக்யமில்லாத னாய் வருந்தி தன் தந்தையை நற்கதியடையச்செ எக்ஞசீலரையடைந்து வணங்கி முறையிட, முனி ல் சண்பகாரண்யம் சேர்ந்து ஹரித்ராநதியிலாடிப் கும் மாளைச் சேவித்துச் சந்தானகோபாலனை எழுந்தருளவா

செய்யக் கூறியபடி செய்து சற்புத்திரனை யடைந்து வாழைப்படி வாழையாய் வாழ்ந்து வந்தான்.

இத்தலம், சுவேதத் தீபம், ஸ்ரீ வைகுண்டம், திருப்பாற்கடல் இவைகளைக் காட்டிலும் பகவானுக்குப் பரம பிரீதியானது. இந்த ஹரித்ராநதியும் சர்வ தீர்த்தங்களிலும் சிறந்தது. ஒவ்வொரு தீர்த்தமும் பகவானது ஒவ்வொரு அங்க சம்பந்தமேயுடையது. இதுவே பகவத் பாததூளி, பகவான் வாய் கொப்பளித்த ஜலம். திருக்கேச ஜலமுதலாக, ஜலக்ரீடையால் சர்வாங்க சம்பந்தமுடைய தனிப்பெருமையுடையது. கோபிகைகளின் குங்குமம், சந்தனம், களப கஸ்தூரி, வாச மஞ்சள் கலந்தமையால் ஹரித்ராநதி யென்று பெயர்பெற்ற மங்கள தீர்த்தமாயிற்று.

இந்த ஸ்தல தெரிசனத்தாலும், தீர்த்தத்தாலும், பிராயச்சித்தமே விதிக்கப்படாத நன்றி மறத்தல் (விசுவாச காதகம்) முதலிய பாபங்களும் நீங்கும். சந்தான கோபாலனைக் கையில் யெழுந்தருளச் செய்துகொள்பவர்கட்குப் புத்ரப்பேறுண்டாகும். மந்திரங்களுள் சிறந்த துவாதசாட்சர மந்திரசித்தி இந்தத் தலத்தில் சுலபமாக சித்திக்கும் என்பதாம்.

உ

தல அர்ச்சனை முதலியன பக்தர்களின் சௌகரியப் ...டி நடத்திவைக்கப்படுகிறது. மேலும் இங்கு ஆண்டாள் களை ...ருக்கோலம் பக்தர்களின் விண்ணப்பத்தின் பேரில் மலை ...ங்காரம் செய்து சேவை சாதிக்கப்படும். இது லத்தை ...வில்லிபுத்தூர் ஆண்டாளது திருக்கோலத்துக்குச் ...ரமாகவே யிருக்கும்.



## காலம்

முதற்குலோத்துங்க சோழன் காலம் 1070—1112—மணவாள மாமுனிவரின் சமகாலம் என்று ராஜாங்கத்தாரால் குறிக்கப்பட்டிருக்கிறது.

## மன்னார்குடி இராஜகோபாலஸ்வாமி கோயிற் கல்வெட்டுக்களின் சுருக்கங்கள்

[திருவாளர் வித்வான் வை. சுந்தரேச வாண்டையாரவர்கள், தமிழாசிரியர், திருவையாறு.]

(செந்தமிழ் வெளியீடு)

### முன்னுரை.

மன்னார்குடி என்பது சோழநாட்டில், திருமால் கோயில் கொண்டு எழுந்தளியிருக்கும் திருத்தலங்களுள் ஒன்றாகும். இத்தலத்துள்ள கோயிலைப் போன்றதொரு பெரிய கோயிலைத் தென்னாட்டில் காண்பது அரிது. இத்திருக்கோயிலின் கருப்பகிருகம், அர்த்த மண்டபம் மூன்றும்கோபுரம் இவைகள் மாத்திரம், சோழ நாட்டைக் கி. பி. 1070 முதல் 1120 முடிய ஆண்ட முதற் குலோத்துங்க மன்னன் காலத்திற் கற்றளியாகக் கட்டப்பெற்ற பெருமையும் பழைமையும் வாய்ந்தனவாகும். எஞ்சியபகுதிகளெல்லாம் தஞ்சையை ஆண்ட நாயக்கமன்னர்களாற் கட்டப்பெற்றிருத்தல் வேண்டும். இச்செய்தி அங்குத் தூண்களிலும் பிறவற்றிலும் செதுக்கப்பட்டுள்ள படிமங்களைக்கொண்டு உணரத்தகும். சோழ மன்னர்கள் காலத்தில் எடுப்பிக்கப்பெற்ற திருமால் திருக்கோயில்களின் அமைப்புமுறை எவ்வாறிருக்கும் என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்னும் பேரவா

வுடையவனுய் இருந்தேன். இந்நிலையில் மன்னார்குடி நேஷனல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் திரு. இராமநாத பிள்ளையால் என்னை, அறியப்பெற்ற அத்திருக்கோயிற் கண்காணிப்பாளர் திருவாளர் கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கள் அக்கோயிற் கல்வெட்டுகளை ஆய்ந்துகொடுக்குமாறு பணித்தனர். யான் இரண்டு நாட்கள் அங்குத் தங்கி அக்கோயிற் கல்வெட்டுக்களைப் படித்து எழுதிக் கொடுத்தேன். அவைகள் பலவிடங்களில் மிகவும் சிதைந்துவிட்டன. கல்வெட்டுகளுக்கு எண்ணெய் தீட்டி வைக்கும் வழக்கம் இல்லாமையால் ஏற்பட்ட இச் சிதைவை அறிந்து வருந்திய என் நிலையைக்கண்டு கோயிற் கண்காணிப்பாளர் விளக்கெண்ணெயைக் கல்வெட்டுகளுக்குப் பூசச்செய்து என்னை மகிழ்வித்தனர். இவர்தம் செய்கையைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இக்கல்வெட்டுக்கள் இக்கோயில் தலவரலாற்றின் இறுதியில் சேர்க்கப்பெற்று அச்சாகி வருகின்றன. எனினும் நம் "செந்தமிழ்" பயில்வார்க்குப் பயன்படுமாறு கோயிலின் அமைப்புமுறை, கல்வெட்டுக்களின் சுருக்கங்கள், எடுத்துக்காட்டாக ஒரு கல்வெட்டு: இவைகளை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

## கோயிலின் அமைப்பு முறை,

கோயில் கிழக்குநோக்கியது. கருப்ப இல்லின் தெற்கு மேற்கு வடக்குப்புறப் பக்கங்களில் திருமால் படிமங்கள் நின்றதிருக்கோலங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன. அர்த்தமண்டபத்தின் தென்புறத்தில் பிள்ளையாரும் வடக்குப்பக்கத்தில் துர்க்கையும் எழுந்தருளுவிக்கப்பெற்றிருக்கின்றன. அர்த்தமண்டபத்தின் வாசலடியில் உள்ள இரு வாயில் காவலாளருக்கும் நான்கு



நான்கு கைகள் இருக்கின்றன. விமானம் செங்கல் திருப்பணியாலானது. அதிலுள்ள சுதைப்படிமங்கள் கண்ணபிரானது செயல்களை உணர்த்துவனவாயுள்ளன. முதற் குலோத்துங்க சோழன்காலத்தில் திருமால் கோயிலின் அமைப்புமுறையை விளக்கிநிற்கும் திருக்கோயில் இஃது ஒன்றேயாகும். ஆதலின் இதனைப் போற்றிப் புரந்தருதல் சைவ வைணவ நன்மக்களது முதற்கடமையாகும்.

## கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள்.

இத்திருக்கோயிலின் கருப்பஇல், அர்த்தமண்டபம், முன்றும் கோபுரம் ஆகிய இவ்விடங்களில் ஆறு கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றுள் முதற் குலோத்துங்கன் காலத்தவை இரண்டும் திரிபுவன சக்ரவர்த்தி இராஜராஜதேவர் காலத்தது ஒன்றும், திரிபுவன சக்ரவர்த்தி இராஜேந்திர சோழதேவர் காலத்தவை இரண்டும், கோனேரின்மைகொண்டான் காலத்தது ஒன்றும் ஆக உள்ளன.

## கோயில் எடுப்பிக்கப்பெற்றகாலம்.

இக்கல்வெட்டுக்களுள் முதற் குலோத்துங்கன் அரியணை ஏறிய நாற்பத்து மூன்றும் ஆண்டில் அதாவது கி. பி. 1113ல் பொறிக்கப்பெற்றதுதான் மிகவும் பழமையானதாகும். அதில் இக்கோயில் குலோத்துங்கசோழ விண்ணகரம் என்று குறிப்பிடப்பெற்றுள்ளது. எனவே இம் முதற் குலோத்துங்கன் பேரால் இக்கோயில் எடுப்பிக்கப்பெற்றிருக்கவேண்டும் என்ற செய்தி புலனாகிறது. ஆதலின் இக்கோயில் கற்றளியாகக் கட்டப்பெற்று இன்றைக்கு 833-ஆண்டுகள் ஆகின்றன என்று கொள்ளுதல் தகும்.

## திருமால் திருப்பெயர்.

இக்கோயிலில் உள்ள திருமாலுக்குக் குலோத்துங்கசோழ விண்ணகர ஆழ்வார், வண்டுவராபதி ஆழ்வார், வண்டுவராபதி மன்னர், இராஜாதிராஜ விண்ணகரப் பெருமாள்: என்னும் பெயர்கள் வழங்கப்பெற்றிருந்தன.

## ஊரின் பெயர்.

இவ்வூர் சுத்தமலிவளநாட்டுப் பிரமதேயம் தனியூர் இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம் என்னும் பெயருடன் திகழ்ந்து வந்தது.

## அளிக்கப்பெற்ற நிபந்தங்கள்.

ஸ்ரீ வண்டுவராபதி ஆழ்வார்க்குச் சிறுகாலை சந்திக்கு, குலோத்துங்க சோழவளநாட்டுத் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரி உடையான் ஒருவன் நிலம் இறையிலியாக விட்டிருந்தான்.

மடப்புற இறையிலியாக நிலம் விடப்பெற்றிருந்தது. வண்டுவராபதி மன்னரும், இவ்வூர்ச் சிவன்கோயில் இறைவர் கயிலாய நாதரும் எழுந்தருளுகைக்கு நிபந்தங்கள் அளிக்கப்பெற்றிருந்தன.

கோநேரின்மைகொண்டான் என்னும் மன்னன் தான் பிறந்த நட்சத்திரமாகிய புரட்டாசி மூலநாளில் இராஜாதிராஜ விண்ணகரப் பெருமாளுக்கு ஆராதனை நடாத்தி எழுந்தருளப் பண்ணுவதற்கு பன்னிரண்டு மா நிலத்தை அளித்துள்ளனன்.

காம்பநாடும், நகரங்களும், கள்ளப்பற்றும் மா விதுகொடுத்து வந்தனர்.



## எடுத்துக்காட்டாக ஒரு கல்வேட்டு.

இருக்குமிடம்:— மூன்றும் கோபுரவாசல் நிலைக்கல்லின் தென்பக்கம்.

அரசன்:— கோநேரின்மைகொண்டான்.

வரி

ஸ்வஸ்தி ஸ்ரீ
திரிபுவன
சக்ரவர்த்திகள்
கோநேரின்மை
கொண்டான் ரா
ஜாதி ராஜசதுர்
வேதி மங்கல
த்து சபையார்
க்கு இவ்வூரில்
ராஜாயிராஜவி
ண்ணகர எம்பெரு
மாள் திருவிடையா
ட்டம் ஆனநிலம் ப
ன்னிரண்டு மாவுக்கு
ம் பன்னிரண்டாவது
வரையும் பத்தாக
விட்டு பத்து நாலு க
ைமை கொண்டார் க
ள் ஆகவும். இந்நாளை தி
ருவாராதனை குறை உட
டொறும் கேட்டோ
ம் பதிமூன்றாவது ஆ
டிமாதமுதல் முதலி
டங்க இறை இலி ஆக
விடவும் நம்முடைய ஆ
ட்டைப் பிறந்தநாள் ஆன
புரட்டாதி மூலத்திலே
திதம் ஆக ஸர்வ வாஹ
னங்களிலும் ஊரிலே
திருநாள் எழுந்தருளு
விக்கவும் இக்கோ
யிலில் நல்வு செய்யா
தொழியவும் பண்ணி
க் குடுக்க இவை வழு
தய தரையன் எழு
த்து நாள் இருநூ
ற் றறுபத்தொன்று
திருவாராதனமும்
நடத்தி திருப் பிரியு
ம் பெருமாள் ஆட்டை
த் திருநக்ஷத்திரத்தி
லே புரட்டாதி மாதம்
மூலத்திலே திவ்யமா
க கொண்டு திருநா
ள் எழுந்தருளியும்
பிரசாதிக்கவு. மா
சந்தோறும் திங்
கள் திருநாள் எழுந்த
ருளவும் சர்வவாஹனங்களில்
மாறி அருளி எழுந்தருளவும் எ
ழுதின திருமுகப்படியே
எழுந்தருளிவிக்கவும்
இப்படிக்கு எழுதின திருமு
கப்படியே கல்வெட்டி
கொள்ளக்கடவதாகவும் சொ
ன்னோம். இப்படிசெய்க பண்பா
ல் உ
ளூர்தலை சேலத்துடையா
ன் ... ... ... ஈயனெழுத்து.

## 1354ம் பசலி, வரவு.

தேவஸ்தானத்துக்கு கிராமங்களில்:

நஞ்சை நிலங்கள் ஏ. 828·६

புஞ்சை ,, ,, 218·51

மன்னார்குடியில்:

நஞ்சை நிலங்கள் 30 ஏ. 260 ச. அடி.

புஞ்சை ,, 84 ஏ. 6226 ச. அடி.

| | நெல் | ரொக்கம் |
|---|---|---|
| | க. ம. ப. | ரூ. அ. ப. |
| கையிருப்பு | 3090–10–0 | 16–9–2 |
| பாங்கு இருப்பு | | 9751–6–11 |
| | | 9768–0–1 |
| நஞ்சை | 9967–6–2 | |
| புஞ்சைப்பகுதி: தோப்புவாடகை | | 3902–3–3 |
| நெல் விற்று வரவு | | 37893–0–6 |
| நெல் கொள்முதல் | 39–8–0 | |
| மோகினி | | 4861–8–8 |
| கட்டளை உபயம் | | 2783–1–7 |
| வட்டி | | 489–11–4 |
| கால்நடை விற்றுமுதல் | | 758–0–0 |
| டிக்ரி வசூல் | | 1599–6–5 |
| சில்லறை ஆசாமிகள் | 1688–6–2 | 8976–12–0 |
| | | 983–3–3 |
| ஆக, | 14786–7–0 | 72014–15–1 |



## 1354ம் பசலி, செலவு.

| | நெல் | ரொக்கம் |
|---|---|---|
| | க. ம. ப. | ரூ. அ. ப. |
| ஆபீஸ் செலவு | 307–7–1 | 6214–11–1 |
| கோவில்பூஜை | 593–0–3 | 15341–15–1 |
| கிராமச் செலவு | 166–9–0 | 1736–13–9 |
| நெல் வரவு செலவு | 11284–0–0 | 119–0–0 |
| இஸ்தியும் வரியும் | | 8331–1–1 |
| கட்டடம் பழுது பார்த்தது | | 209–7–0 |
| கால்நடை தீனிச் செலவு | | 755–6–6 |
| சுகாதாரச் செலவு | | 633–5–6 |
| கண்டிரிபியூஷன் போர்டு & ஆடிட்டர் செலவு | | 2038–15–0 |
| சில்லறைச் செலவு | 78–10–1 | 580–7–6 |
| போர்க்கடன் பத்திரம் | | 5000–0–0 |
| வண்டி மாடு கொள்முதல் | | 840–7–1 |
| விவகாரச் செலவு | | 586–7–6 |
| சில்லறை ஆசாமிகள் | 1059–0–3 | 7089–15–0 |
| | | 2983–3–0 |
| இருப்பு | 1297–3–0 | 19111–2–4 |
| | | 442–9–8 |
| ஆக. | 14786–7–0 | 72014–15–1 |

## நிர்வாகம்

தண்ணீர்க்குன்னம், பிரபல மிராசுதார் T. S. சிங்காரவேலுடையாரின் அவிகார குமாரர் திருவாளர் T. S. சுவாமிநாத உடையாரவர்கள் ஏகதேச தரும கர்த்தா. எக்ஸிகியூடிவ் ஆபிசர், V. சுந்தரராஜு பிள்ளை, அவர்கள், B. A., B. L,

இத்தலம் ஆழ்வாராதிகளால் மங்களாசாசனம் செய்யப்படவில்லை.

மணவாளமாமுனிகள் சமர்ப்பித்ததாவது, திருவாய்மொழி 4ம் பத்து 6வது திருவாய்மொழி "தீர்ப்பாரை" முதல் 11 பாசுரங்கள்.

### பிரதானமான பாடல்.

உன்னித்து மற்றொரு தெய்வந்தொழாள் அவனையல்லால்
நும்மிச்சை சொல்லினும் தோள்குலைக்கப்படும் அன்னைமீர்
மன்னப்படு மறைவாணனை வண்டுவராபதி மன்னனை
ஏத்துமின் ஏத்துதலும் தொழுதாடுமே. (10 பாசுரம்.)

### தல நூல்கள்.

முன் சரிதத்தில் கண்ட சுவர்ண சிகாமணி மகாராஜாவால் ஸமஸ்கிருதத்தில் 32 தியான சுலோகங்களுண்டு. அது அர்ச்சனைகளில் தீக்ஷதர்களால் சொல்லப்பட்டு வருகின்றது. தமிழில் இராஜகோபால பிள்ளை என்பவரால் வடமொழியிலுள்ள புராணத்தைத் தழுவி ஒரு புராணம் பாடப்பெற்றுள்ளது.

T. S. Swaminatha Odayar, Trustee. V. Sundararaja Pillai B.A., B.L., Executive officer.

பா[illegible]தி பிரஸ் மன்னார்குடி. P.I.C. 161 Or. No 5157 C. 500.

113344